

# மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்த நடைமுறை

# மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்த நடைமுறை

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ரோம், 2003

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டொமே டி , காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

உவேஅ 2003

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
***2009***

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*

**Bay of Bengal Programme**
**Inter-Governmental Organisation**
91, Saint Mary's Road, Abhiramapuram,
Chennai - 600 018, Tamil Nadu, India
Tel: +91-44-24936294, 24936188; Fax: +91-44-24936102
Email: info@bobpigo.org; website: www.bobpigo.org

## ஆவணம் தயாரித்தல்

இந்த ஆவணம் மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்தும் நடைமுறையின் விளக்கங்களை கொண்டுள்ளது (நடைமுறை– மீநிபோ)

மீன்வள ஆராய்ச்சி மீதான ஆலோசனைக் குழுவின் (மீஆஆகு) முதலாவது அமர்வு (1997) மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு ஆகியவற்றின் விபரங்கள் சேமித்து பரவச் செய்யும் வழிகள் பற்றி பல கவலைகளை எழுப்பியது. இவற்றை மேம்படுத்தப் பரிந்துரைத்தது. மீன்வளக்குழுவின் (மீவகு) 23வது அமர்வு (1999) மீஆ ஆகுழுவின் அறிக்கையை உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து, மீஆஆகுழு மற்றும் மீன்வளத்தில் நிலை மற்றும் போக்கு மீதான அதன் தொழில்நுட்ப செயற்குழு நிலைமையை மேம்படுத்த செயல்திட்டம் மற்றும் நடைமுறை ஒன்றிற்கு கருத்துருவை வகுத்தது. மீன்வளக்குழுவின் 24வது அமர்வு (2001) இந்த கருத்துருவை பரிசீலித்து தொழில் நுட்பக் கலந்தாய்விற்கு பரிந்துரைத்தது. மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்தும் நடைமுறை பற்றி தொழில்நுட்ப கலந்தாய்வு (25–28 மார்ச் 2002) பேச்சுவார்த்தை நடத்தி மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்தும் நடைமுறைக்காக வரைவு ஒன்றை ஏற்று கொண்டது. மீன்வளக்குழுவின் 25வது அமர்வில் 2003, பிப்ரவரி 28ல் நடைமுறை ஒற்றுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. உவே அமைப்பு குழு 124 வது அமர்வில் 2003, ஜுன் 28ல் இதனை உறுதி செய்தது.

நடைமுறையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் ஆயத்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அரசு மற்றும் ஆல்பிரெட் பி. ஸ்லோயனின் கடல்சார் உயிரின கணக்கு எடுக்கும் அமைப்பு ஆகியவை நிதிவழங்கியது.

**உவேஅ.**

மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்த நடைமுறை.

ரோம், உவேஅ. 2003. பக். 16.

**சுருக்கம்**

நடைமுறை–மீநிபோ ஒரு தன்னார்வமான சாதனமாகும். அனைத்து நாடுகளுக்கும் தொடர்புடைய பொருட்களுக்கும் பொருந்தும். இதன் முழுமையான நோக்கம், சூழல் அமைப்பிற்குள் மீன்வள ஆதாரங்களின் வளம்குன்றாத பயன்பாடு மற்றும் பாதுகாப்பிற்காக மீன்வள கொள்கை அமைத்தல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கு அடிப்படையாக மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கினைப் புரிந்து கொள்வதற்கும் மற்றும் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கும் திட்டம் மற்றும் நடைமுறை மற்றும் வடிவமைப்பை வழங்குவதே ஆகும். அறிமுகப்பிரிவைத் தொடர்ந்து, நடைமுறையின் தன்மை மற்றும் நோக்கம் குறிப்பிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, நடைமுறையின் நோக்கம், வழிகாட்டும் கொள்கைகள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் குறிப்பிடப்படுகின்றன. தேவையான நடவடிக்கைகள் ஒன்பது முக்கிய பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றன. வளரும் நாடுகளில் திறனை வளர்த்தலுக்கான தேவை முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. இறுதியாக, உயர்வு மற்றும் செயல்படுத்தும் நுட்பங்கள் குறிப்பிடப்படுகின்றன. நாடுகள் மண்டல மீன்வள குழுக்கள், மற்றும் ஏற்பாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (உவேஅ) மேம்பாட்டில் பங்கு கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்கு உள்ளடக்கப்படுகிறது.

**உள்ளடக்கம்**

***பக்கம்***

மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்தும் நடைமுறை ........ 5

பகுதி 1 – முன்னுரை ........ 5

பகுதி 2 – தன்மை மற்றும் வாய்ப்பு ........ 7

பகுதி 3 – நோக்கம் ........ 8

பகுதி 4 – வழிகாட்டும் கொள்கைகள் ........ 8

பகுதி 5 – தேவையான நடவடிக்கைகள் ........ 10

பகுதி 6 – உயர்வு மற்றும் செயல்படுத்தும் நுட்பங்கள் ........ 14

## மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்தும் நடைமுறை

### பகுதி 1: முன்னுரை

1. மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கு மற்றும் சமூக பொருளாதார வகைகள் உள்ளிட்ட மீன்வள ஆதாரங்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு, கொள்கை அமைத்தல் மற்றும் பொறுப்பார்ந்த மீன்வள மேலாண்மை ஆகியவற்றை எதிரொலிக்க மிகவும் முக்கிய மானதாகும். தேசீய அளவில் உணவுப்பாதுகாப்பை நிர்வகிக்க இது மிகவும் அவசியமானது. மீன்வளத்தின் சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை விளக்குவதற்கும் இது அவசியமானது. மீன்வள கொள்கை அமைத்தல் மற்றும் மேலாண்மை முறை பல்துறையினரிடையே மிகவும் சுறுசுறுப்பானது. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கினை கணக்கில் கொள்வது இதற்கு அவசியமாகிறது. மீன்வள கொள்கையின் ஏற்புடைமையை மதிப்பிடுவதற்கும் மற்றும் மீன்வள மேலாண்மை நிறைவேற்றியதை அடையாளம் காண்பதற்கும் மீன்வளத்தின் போக்கு மற்றும் நிலை பற்றிய விபரம் மிகவும் தேவையானது.

2. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களுக்காக உயர்மட்ட பொதுவான ஆர்வம் உள்ளது. மிகவும் சரியான குறித்த நேரத்தில் கிடைக்கும் விபரங்கள் பொறுப்பார்ந்த முறையில் மீன்வளத்தை நிர்வகிப்பதற்கு உதவிடுபவர்களுக்கு நன்கு தெரிவிக்க பயன்படும். மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களை உடனடியாக புரிந்து கொள்வதும் மற்றும் பரவச் செய்வதும், பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு (பத்திகள் 6.13 மற்றும் 7.1.9) குறிப்பிடுவது போல் மீன்வள மேலாண்மையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும்.

3. கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான சாட்சியங்களின் அடிப்படையில் முன் எச்சரிக்கை அணுகுமுறையைப் பயன்படுத்துவது பொறுப்பார்ந்த மீன்வளத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளின் முக்கிய பகுதியாகும். இதற்கு, கொள்கை அமைத்தல் மற்றும் மீன்வள மேலாண்மைக்கு உதவிடும் மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்கள் கிடைக்கக்கூடியது தேவையாகிறது.

4. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்கள் தேவைப்படுவது அல்லது பன்னாட்டு சாதனங்களுடன் இணக்கத்துடன் இருப்பது, உள்ளடக்குவதாவது:

- கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் மரபு (ஐநாகசம) (1982) கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான சாட்சியத்தை கணக்கில் கொள்ள வேண்டிய தேவையை உணர்த்துகிறது. 1982 டிசம்பர் 10, கடல்சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் மரபின் பகுதிகளை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்புகளை நிர்வகிப்பது மற்றும் மேலாண்மை செய்வது (1995) தொடர்பானது, இருப்பு மதிப்பீட்டிற்குத் தேவையான விபரங்களை சேகரிப்பது மற்றும் பரிமாற்றம் செய்து கொள்வது ஆகியவற்றிற்கான பொறுப்புகளை வெளிப்படைத்தன்மைக்கான பகுதிகளையும் சேர்த்து குறிப்பிடுகிறது (கட்டுரை 12);

- மீன் பிடிகலன்கள் மீதான சில தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்வது தேவைப்படும் உவேஅ ஒப்பந்தம் (1993) ஆழ்கடலில் மீன்பிடி கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணக்கமாக இருத்தலை மேம்படுத்துகிறது;

- பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு (இனி விதித்தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான சாட்சியம் ஆராய்ச்சி மற்றும் தகவல் சேகரிப்பில் இருமுக மற்றும் பல்முக ஒத்துழைப்பு (கட்டுரை 6.4) விபரங்களைத் தொகுக்க மற்றும் பரிமாற்றம் செய்து கொள்ள (சமூக பொருளாதார விபரங்களையும் உள்ளடக்கியது கட்டுரை 7.4) வெளியிட மற்றும் முடிவுகளை பரவச் செய்ய ஒத்துழைப்பிற்காக மண்டல அளவில் நுட்பம் ஆகியவற்றைக் கோருகிறது;

- உவே அமைப்பின் பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகள் (பசெதிந) விதித்தொகுப்பின் வெவ்வேறான பகுதிகளை செயல்படுத்துவதற்கானது. பசெதிநடவடிக்கை போன்றவை மீன்பிடிப்பு திறனை மேலாண்மை செய்வதற்கானது. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றி தேவையான விபரங்களின் வாய்ப்பை மீன்பிடிப்பு திறன் முறைகளை சேர்க்க விரிவாக்குகிறது;

- கடல் சார் சூழல் அமைப்பில் பொறுப்பார்ந்த மீன்வளம் மீதான ரெய்க்ஜாவிக் அறிவிக்கை சூழல் அமைப்பை நன்கு பரிசீலித்தலைக் கோருகிறது. அதன் மூலம் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களின் வாய்ப்பை, சூழல் அமைப்பின் பரிசீலனையை பிரதிபலிக்க மேலும் விரிவாக்கக் கோருகிறது.

- வளம்குன்றாத மேம்பாட்டிற்கான குழு, நிகழ்ச்சி நிரல் 21ன் அதிகாரம் 40ல் சுற்றுப்புறம் மற்றும் மேம்பாடு மீதான ஐக்கிய நாடுகளின் கூட்டம் என்று குறிப்பிடப்படுவது, மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைப் பகுதியாக அடிப்படையாகக் கொண்ட வளம்குன்றாத தன்மை மீதான சுட்டிக்காட்டிகளை தெரிவிக்க நாடுகளைக் கோருகிறது. (சுமே ஐநாகூ) ;

- பன்னாட்டு மரபுகள், ஆபத்திற்குள்ளான சிற்றின வகைகளின் வர்த்தகம் (ஆசிவவ) (1973), மற்றும் உயிரியல் பல்வகைப் பெருக்கம் மீதான மரபுகள் போன்றவை (1942) உயிரினங்களின் நிலை பற்றிய விபரங்களைச் சேகரித்தல் மற்றும் பரிமாற்றம் செய்து கொள்வதைக் கோருகிறது;

- (அ) ஐக்கிய நாடுகளின் சுற்றுப்புறத்திட்டம் (ஐநாசுதி) (ஆ) ஐக்கியநாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (ஐநாகவிபநி)அரசிடை கடலியல் குழு, (அககு) (இ) உலகளாவிய சுற்றுப்புற வாய்ப்புகள் வழங்கும் பெரிய கடல்சார் சூழல் அமைப்பு திட்டங்கள் (ஈ) மீன்வள புள்ளியியல் மீதான ஒருங்கிணைந்த செயல்குழு (ஒசெகு) மற்றும் (உ) வளம்குன்றாத மேம்பாடு மீதான இடைநிறுவன குழு போன்றவை அடங்கிய பன்னாட்டு திட்டங்கள் மீன்வள விபரங்களைக் கோருகிறது. அல்லது அவை அவற்றிற்கு தேவையாகிறது.

வளம்குன்றாத மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக பல நாடுகள் அவற்றின் தேசீய சட்டங்களை மாற்றி அமைத்துள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெவ்வேறான பன்னாட்டு சாதனங்கள் போன்றவற்றுடன் வரிசைப்படுத்துவதற்காக மாற்றி அமைத்துள்ளன. தேசீய அளவில் வளம்குன்றாத மீன்வளத்தை மேம்படுத்துவதற்கு மேம்படுத்தப்பட்ட நிலை மற்றும் போக்கு பற்றி விபரங்கள் தேவைப்படுகின்றன.

5. மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்த நடைமுறை (நடைமுறை – மீநிபோ) 2003, பிப்ரவரி 28ல் மீன்வளக்குழுவினால் (மீவகு) ஒற்றுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பகுதி 2: தன்மை மற்றும் வாய்ப்பு

### நடைமுறையின் தன்மை

6. விதித்தொகுப்பின் கட்டுரை 2 (1) மற்றும் (2) குறிப்பிடும் வடிவமைப்பிற்குள் நடைமுறை விரிவாக்கப்பட்டுள்ளது. விதித்தொகுப்பின் கட்டுரை 3ன் பகுதிகள் இந்த ஆவணத்தின் பயன்பாடு மற்றும் பொருள் விளக்கத்திற்குப் பொருந்தும். பிற சாதனங்களுடன் ஆன தொடர்புக்கும் பொருந்தும். உவே அமைப்பு மற்றும் மீன்பிடிப்பு உடன் தொடர்புடைய அனைத்து உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதோர் ஆகிய அனைவரும் இதனைச் செயல்படுத்துவதற்கு உதவிட ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

7. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைத் திரட்டவும் மற்றும் பரவலாக்குவதற்கும் இந்த நடைமுறை செயல்படுத்தப்படும். பத்தி 4ல் விளக்கியதைப் போன்று பிற பன்னாட்டு சாதனங்கள் மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கினை கண்காணிப்பதற்காக விபரங்கள் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி தேவைகளை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள உவே அமைப்பின் சட்டமைப்பு கட்டுரை 11ன்படி மீன்வளப் புள்ளியியல் விபரங்களை நாடுகள் உவே அமைப்பிற்கு தெரிவிக்கும் கடமைகளுக்கும் இவை தேவையாகின்றன. சட்டப்படியான புதிய கடமைகளை நடைமுறை நிறுவவில்லை எனினும், தகவல் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சியை குறிப்பிடத்தத்தக்க வகையில் பலப்படுத்துவதற்கு முன்மொழிகிறது. ஏற்கனவே இருப்பவற்றை நிறைவேற்றுவதற்கு தூண்டுதலை வழங்குகிறது. அரசு அல்லது அரசு சாராத மற்றும் நிதி நிறுவனங்கள் (மேம்பாட்டில் பங்கு கொள்ளும் நிறுவனங்கள்) போன்ற தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்களின் திறனை வளரும் நாடுகளில் மேம்படுத்துவதற்கான கூடுதலான உதவியை இந்த தூண்டுதல் உள்ளடக்கும்.

8. இந்த நடைமுறையில் நாடுகள் எனக்குறிப்பிடப்படுவதில் ஐரோப்பிய சமுதாயமும் அதன் தகுதிக்குள் உள்ள பொருளில் அடங்கும்.

### நடைமுறையின் வாய்ப்பு

9. நடைமுறை உலகளாவிய வாய்ப்பு கொண்டது. நன்னீர் மற்றும் கடல் பகுதிகளின் மீன்வளத்தில் அனைத்து மீன்பிடிபாட்டையும் உள்ளடக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழில், வர்த்தகம், பிழைப்பு மற்றும் பொழுது போக்கு போன்ற அனைத்து மீன்பிடிப்பும் இதில் அடங்கும். சிற்றின வகைகளை அறிமுகப்படுத்துவது (திட்டமிட்டு அல்லது நோக்கமின்றி) இயற்கையான இருப்பை அதிகரித்தல், இயற்கை நிலையில் மேலும் வளர்வதற்கு விட்டு வைத்தல் அல்லது வளர்ப்பில் பருமானக்குதல் மற்றும் இருப்பை மீட்பு செய்தல் ஆகியவை தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்கும்.

10. நடைமுறை நீர்வாழ் உயிரின வளர்ப்புக்குப் பொருந்தாது. ஏனெனில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தனித்த தேவைகளைக் கொண்டது. பெருகிவரும் முக்கியமான இந்தப் பிரிவிற்கு குறிப்பிடக் கூடிய வகையில் தேவைகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

11. நடைமுறையில் மீன்வள ஆதாரங்கள் மற்றும் சமூகப் பொருளாதார விபரங்கள் உள்ளிட்ட முக்கிய மீன்வளப் பிரிவு ஆகியவை தொடர்பான விபரங்களே முக்கியப்படுத்தப்படுகின்றன.

## பகுதி 3: நோக்கம்

12. நடைமுறையின் முழுமையான நோக்கம் வடிவமைப்பு ஒன்றை வழங்குவதே ஆகும். சூழல் அமைப்பிற்குள் மீன்வள ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை மேலாண்மை செய்தல் மற்றும் மீன்வள கொள்கை அமைத்தல் ஆகியவற்றிற்கு அடிப்படையாக மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல் அறிவை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கான வடிவமைப்பை வழங்கும்.

13. இந்த நடைமுறை ஒப்பந்தங்கள் மூலமாக செயல்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் நாடுகள் மற்றும் உவேஅமைப்பிற்கு இடையில் நேரடியாக அல்லது மண்டல மீன்வள நிறுவனங்கள் மற்றும் ஏற்பாடுகளில் அவற்றின் பங்கு கொள்ளுதல் மூலமாக செயல்படுத்தப்படும் மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரிக்க ஒற்றுமையாகச் செயல்படும். நிர்வகிக்கவும் மற்றும் அவற்றை பரவலாக்குதலுக்கும் சமீபத்திய தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும். உள்ளூர், தேசீயம் மண்டலம் என்ற வெவ்வேறான எல்லையில் பல்வேறு நிலையில் ஒப்பந்தங்கள் நிறுவப்படும். உலகளாவிய அமைப்பை ஏற்படுத்த இவை உவே அமைப்பின் கீழ் தொடர்பு படுத்தப்படும். இயலும் இடங்களில் இயலும் நிலையில் தற்போதுள்ள நிறுவனங்கள் ஏற்பாடுகளுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படும்.

14. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விரிவான விபரங்களைச் சேகரிக்கவும் மற்றும் பரவச் செய்வதற்குமான உலகளாவிய முயற்சிகளில் (உ.ம். உவே அமைப்பின் மீன்வள உலகளாவிய தகவல் அமைப்பு மூலமாக (மீஉதஅ) தற்சமயம் இடையூறு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் உலகின் மீன்வள இருப்புகள் பற்றிய முழுமையான விபரப் பட்டியல் தற்சமயம் இல்லை. மீஉத அமைப்பில் செயல்படுத்த அத்தகைய விபரப்பட்டியல்களைத் தயாரிப்பதே நடைமுறையின் முக்கிய பகுதியாகும்.

15. விதித்தொகுப்பின் கட்டுரை 5க்கு இணங்கி நடைமுறையை செயல்படுத்துவதில் வளரும் நாடுகளின் திறன் சரியாக கணக்கில் கொள்ளப்படும். வளரும் நாடுகளின் திறன், குறிப்பாக அவற்றில் குறைவாக வளர்ச்சியைப் பெற்றவை, சிறு தீவுகள் மற்றும் தகவல் சேகரிப்பு அமைப்புகள் இக்கட்டான நிலையில் உள்ள நாடுகள் ஆகியவற்றில் பெரிதும் உயர்த்தப்படவேண்டும். அப்பொழுது தான் அவற்றால் மீன்வள புள்ளியியல் விபரங்களைச் சேகரிக்கவும் மற்றும் மீன்வள ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் அவர்களுக்கு உள்ள கடமைகளை நிறைவேற்றவும் இயலும். அதன் மூலம் மிகவும் முழுமையாக நடைமுறையில் பங்கு பெற தங்களை அனுமதித்துக் கொள்ள இயலும்.

## பகுதி 4: வழிகாட்டும் கொள்கைகள்

16. கீழ்க்கண்ட பத்திகளில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளபடி இந்த நடைமுறையை செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஆறு வழிகாட்டும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

### வளம் குன்றாத தன்மை

17. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரித்து பரவச் செய்வதற்கான ஏற்பாடுகள் நீண்டகாலப் போக்கில் நிலைத்திருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் விளைவாக: (1) நாடுகள், மண்டல மீன்வள நிறுவனங்கள் மற்றும் ஏற்பாடுகள் மற்றும் உவேஅ ஆகியவற்றிற்கு உள்ள ஆதாரங்களைக்

கணக்கில் கொண்டு தேசீய, மண்டல மற்றும் உலக அளவில் போதிய அளவில் நிதி வழங்குதல்; மற்றும் (2) தகுந்தவாறு தேசீய திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை உருவாக்க பயிற்சி மற்றும் திறனை மேம்படுத்த வளரும் நாடுகளுக்கு அதிக முதலீடு தேவையென்பதால் அந்நாடுகளின் குறிப்பிட்ட தேவைகளைப் பரிசீலிக்கும் திட்டங்கள்.

**சிறந்த விஞ்ஞான சாட்சியங்கள்**

18. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரித்தல் மற்றும் பரவச் செய்தல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான சாட்சியங்களின் தரத்தை உறுதி செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்ட முறை பயன்படுத்தப்பட வேண்டும். மீன்வளத்தின் பங்கு கொள்வோரின் அறிவு அவ்வாறே பாரம்பரிய அறிவு ஆகியவற்றை கருத்தில் கொள்ளும் தேவையை அத்தகைய முறைகள் கணக்கில் கொள்ள வேண்டும்.

**பங்கு கொள்ளுதல் மற்றும் ஒத்துழைப்பு**

19. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரித்தல் மற்றும் பரவச் செய்தல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் மீன்வள விபரங்களை தயாரித்தல் ஆய்வு செய்தல் மற்றும் வழங்குதலில் பங்கு கொள்ளும் தொடர்புடைய அனைவரையும் உள்ளடக்கும் நுட்பத்தைப் பின்பற்ற வேண்டும். தொடர்புடைய பங்கு கொள்வோரில், மீன்பிடிப்போர், தொழில் பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் அடங்கும். பன்னாட்டு சட்டங்களுக்கு இணங்கி, நாடுகள் மற்ற நாடுகளுடன் அத்தகைய மீன்வள விபரங்களை மேம்படுத்தி மற்றும் நிர்வகிப்பதில், உரியவாறு நேரடியாக அல்லது மண்டல மீன்வள அமைப்பு மற்றும் ஏற்பாடுகளை உள்ளடக்கிய உரிய பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாக ஒத்துழைக்க வேண்டும். மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றி தொடர்புடைய பங்கு கொள்வோர் அனைவருக்கும் பின்னூட்ட தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

**நோக்கத்தின் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை**

20. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரித்துப் பரவச் செய்தலுக்கான ஏற்பாடுகள் கிடைக்கக் கூடிய சிறந்த விஞ்ஞான சாட்சியத்தை வழங்க வேண்டும் (பத்தி 18) மற்றும் விதித்தொகுப்பின் கட்டுரை 6.13க்கு உதவியாக ஏதேனும் மந்தனத் தேவைகளைக் கவனிக்கும் பொழுது வெளிப்படைத்தன்மைக்கும் சிறந்த விஞ்ஞான சாட்சியத்தை வழங்க வேண்டும். நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களுடன் தொடர்புடைய உறுதியற்ற நிலையையும் தெரிவிக்க வேண்டும்.

**காலந்தவறாமை**

21. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரித்து பரவச் செய்தலுக்கான ஏற்பாடுகளுக்கு விபரங்களை காலம் தவறாத வகையில் வழங்க வேண்டும்.

**வளையும் தன்மை**

22. மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் சேகரித்து பரவச் செய்தலுக்கான ஏற்பாடுகள் போதிய அளவில் வளையும் தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும். உரிய விபரங்களின் பகுதிகள் மூலமாக மீன்வள கொள்கை

அமைத்தல் மற்றும் மேலாண்மைக்கு திறமையாக உதவிடுதலை உறுதி செய்ய தேவையான மாற்றங்களை அனுமதிக்கும் வகையில் வளையும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

**பகுதி 5: தேவையான நடவடிக்கைகள்**

**வளரும் நாடுகளில் திறனை மேம்படுத்துவதற்கான தேவை**

23. நாடுகள், தொடர்புடைய அரசிடை நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி, தொழில் நுட்ப மாற்றம், பயிற்சி மற்றும் விஞ்ஞான பூர்வமான ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான வளரும் நாடுகளின் தேவைகளைத் தெரிவிக்க வேண்டும். இதனால் சிக்கனமான வளம்குன்றாத மீன்வள தகவல் சேகரிப்பு, தகவல்களைத் தொகுத்தல், ஆய்வு செய்தல் மற்றும் அறிவித்தல் மற்றும் விபரங்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் ஆகியவற்றிற்கான திறனை மேம்படுத்தலாம். தேசீய தேவைகள், மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளின் தேவைகள் ஆகியவற்றை நிறைவேற்ற திறனை மேம்படுத்துதல் அவசியமாகிறது. உவே அமைப்பிற்கு மீன்வள விபரங்களை அறிவிக்க வேண்டிய தற்போதுள்ள கடமையை நிறைவேற்ற அவசியமாகிறது. அதனால் வளரும் நாடுகள் மேலும் அதிகமாக நடைமுறையில் பங்கு கொண்டு அதிலிருந்து அதிகமாகப் பயன்களைப் பெறலாம்.

**சிறுதர மீன்வளம் மற்றும் பல்வகை சிற்றின மீன் வளங்களில் தகவல் சேகரிப்பு அமைப்புகள்**

24. நாடுகள், தொடர்புடைய அரசிடை நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், பல சிறு தர மீன்வளம் மற்றும் பல்வகை சிற்றின மீன்வளங்கள் குறிப்பாக வளரும் நாடுகளில், நன்கு கண்காணிக்கப்படுவதில்லை என்பதனை உணர வேண்டும். இத்தகைய மீன்வளங்களை கண்காணிப்பதன் முக்கியத்துவத்தை உணரும் தேவையை ஏற்படுத்த வேண்டும். இவை குறைவாக மதிப்பிடப்படுகின்றன. ஆகையால் தற்போதைய மீன்வள நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களில் குறைவாகவே குறிப்பிடப்படுகின்றன. அதன் விளைவாக மீன்வளத்திற்கான கொள்கைகள் மற்றும் மேலாண்மைத் திட்டங்களில் இவை போதியவாறு பரிசீலிக்கப் படுவதில்லை.

25. தேவையான இடங்களில் மேம்பாட்டில் பங்கு கொள்ளும் நிறுவனம் மற்றும் உவேஅ ஆகியவற்றின் உதவியுடன் தகவல்களைச் சேகரிக்கும் அவர்களின் திறமையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இயன்றவரை மீன்வள விபரங்களைச் சேகரித்தல் முழுமையாக உள்ளது மற்றும் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன, குறிப்பாக சிறுதர மீன்வளம் மற்றும் பல்வகைச் சிற்றின மீன்வளம் ஆகியவற்றை மதிப்பிட தேவையான விபரங்கள் உள்ளன என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

26. சிறுதர மீன்வளம் மற்றும் பல்வகை சிற்றின மீன்வளங்கள் மீதான விபரங்களைப் பெறவும் அவற்றை உரியவாறு சரிப்படுத்துவதற்கும் சிக்கனமான முறைகளில் நாடுகள் பங்கு கொண்டு மற்றும் அவற்றை மேம்படுத்த உதவ வேண்டும். விரைவு மதிப்பீட்டு முறைகள் மற்றும் விபரங்கள் குறைவாக உள்ள நிலைக்கான பிற அணுகுமுறைகள் மற்றும் தகவல் சேகரிப்பு திட்டங்களில் மீன்பிடிப்போர் மற்றும் அவர்களின் அமைப்புகள் பங்கு கொள்வது தொடர்பான பங்கு கொள்ளும் முறைகள் ஆகியவை இவற்றுள் அடங்கும். தொடர்ந்து கண்காணிப்பதைவிட உரிய இடைவேளியில் வழக்கமான அளவைகள் குறிப்பாக சில நன்னீர் மற்றும் சிறுதர மீன் வளங்களுக்கு மிகவும் சாத்யமானதாக இருக்கும்.

27. நாடுகள் அவற்றின் மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள், மண்டல திட்டங்கள் மூலமாக ஒத்துழைக்க வேண்டும். தேவையெனில் உவேஅ உதவியுடன், உவே அமைப்பின் அமைப்புகளுக்கு இணக்கமான திறமையான தகவல் சேகரிப்பு அமைப்புகள் நடைமுறைக்கேற்ற வரையறைகளைப் பின்பற்றி அவற்றை மேம்படுத்த வேண்டும்.

28. உவே அமைப்பு அதன் உறுப்பினர்கள் மற்றும் மேம்பாட்டில் பங்கு கொள்ளும் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் சிறுதர மீன்வளம் மற்றும் பல்வகைச் சிற்றின மீன்வளம் ஆகியவற்றிற்காக தனித்த தகவல் சேகரிப்பு மற்றும் மதிப்பீட்டு தேவைகளைத் தெரிவிக்க வேண்டும். புதிதான அணுகுமுறைகள் மற்றும் வழிகாட்டு முறைகளை ஏற்படுத்த வல்லுநர்களின் கூட்டத்தைப் பயன்படுத்துதலும் இதில் அடங்கும்.

**சூழல் அமைப்பு பரிசீலனைகளை மீன்வள மேலாண்மைக்குள் உள்ளடக்கும் தேவை உள்ளிட்ட மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களின் வாய்ப்பை விரிவாக்குதல்**

29. விதித்தொகுப்பு குறிப்பாக இப்பிரிவு கட்டுரை 7 உடன் தொடர்பு படுத்தப்படுவதால் (மீன்வள மேலாண்மை) குறிப்பாக கட்டுரை 7.4.2 மற்றும் கட்டுரை 12 (மீன்வள ஆராய்ச்சி) செயல்படுத்துதலை நாடுகள் அணுக வேண்டும். அவற்றில் மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மீது வானிலை, சுற்றுப்புறம் மற்றும் சமூகப் பொருளாதார காரணிகளால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விபரங்களை பரவச் செய்தல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்காக பரிந்துரைக்கப்படும் பொறுப்புகளைச் சந்திக்க நிலை மற்றும் போக்கினை அறிவிக்கும் வாய்ப்பை விரிவாக்க வழிகளைப் பரிசீலித்தல் வேண்டும்.

30. நாடுகள் நேரடியாக அல்லது மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளில் பங்கு கொள்வதன் மூலம், சூழல் அமைப்பு பரிசீலனைகளை உள்ளடக்கி மீன்வள மேலாண்மையை மேலும் மேம்படுத்துவதற்கு உதவிட மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்கள் சேகரிப்பதை விரிவாக்குவது பற்றி பரிசீலிக்க வேண்டும்.

31. உவேஅ அதன் உறுப்பினர்களின் உதவியுடன் மற்றும் மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியவற்றில் முழுமையான பங்கு கொள்வதுடன், வளம்குன்றாத வளர்ச்சியின் சுட்டிக்காட்டிகள் குறித்த பிரச்சினை பற்றி மேலும் தெரிவிக்க வேண்டும். உவே அமைப்பின், கடல்சார் மீன்பிடிபாட்டில் வளம்குன்றாத தன்மைக்கான சுட்டிக்காட்டிகள் மீதான தொழில் நுட்ப கலந்தாய்வின் தொடர்ச்சியாக இது பற்றி தெரிவிக்க வேண்டும். (சிட்னி, ஆஸ்திரேலியா, ஜனவரி 1999).

**மீன் இருப்பு மற்றும் மீன்வளத்தின் உலகளாவிய விவரப்பட்டியல்**

32. மீன் இருப்பு மற்றும் மீன்வளத்தின் உலகளாவிய விவரப்பட்டியலை அல்லது இருப்பு கலவைகளை தொகுப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளில் நாடுகள் பங்கு கொள்ள வேண்டும் அல்லது உதவிட வேண்டும் (உயிரியல் மேலாண்மை அலகுகள்) மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய கிடைக்கக்கூடிய விபரங்களின் முழுமையை மேம்படுத்தவும் மற்றும் மீஉத அமைப்பில் சேர்க்கவும் இவை அடிப்படையாக அமையும்.

33. விபரப்பட்டியலை மேம்படுத்துவதற்கான முதல்படியாக வரையறை, படிவம் உள்ளடக்கம் மீன்வளம் மற்றும் மீன் இருப்புக்கான உலகளாவிய விபரப் பட்டியலை

தொகுக்கும் (அல்லது இருப்பு கலவை) திட்டத்தின் செய்முறைகள் மற்றும் செயல்படுத்துதல் (வரையறை மற்றும் பொறுப்புகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் செலவினத்தை மதிப்பிடுதல் ஆகியவற்றையும் சேர்த்து) ஆகியவற்றை மேம்படுத்த உவே அமைப்புடன் நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். பசெதிநடவடிக்கைகள் மூலமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கான முயற்சியுடன் ஒத்துழைத்தல் மற்றும் அதற்கான தேவைகளை குறிப்பில் கொள்ள வேண்டும்.

34. உவேஅ அதன் உறுப்பினர்களின் உதவியுடன் நேரடியாக அல்லது மண்டல மீன்வள அமைப்பு அல்லது ஏற்பாடுகள் மூலமாக மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களின் விஞ்ஞான பூர்வமான கவனக்குறைவுகளுக்காக முறை ஒன்றை நிறுவுதலைப் பரிசீலிக்க வேண்டும். உலகளாவிய மீன் இருப்பு மற்றும் மீன்வள விபரப்பட்டியல், உலக மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்காக (உமீநீ) தயாரிக்கப்படும் மீன்வள நிலை மற்றும் போக்கின் உலகளாவிய மதிப்பீடு மற்றும் உவே அமைப்பின் மீஉத அமைப்பிற்கு சமர்ப்பிக்கப்படுபவை அனைத்தும் இதில் அடங்கும்.

**மீஉத அமைப்பில் பங்கு கொள்ளுதல், அமைப்பு மற்றும் திறனை மேம்படுத்துதல்**

35. கீழ்க்கண்டபடி நாடுகள் நேரடியாக அல்லது மண்டல மீன்வள அமைப்பு அல்லது ஏற்பாடுகள் மூலமாக ஆகிய இரண்டு முறைகளிலும் மீஉத அமைப்பை மேம்படுத்த வேண்டும்:

- அமைப்பிற்கு உள்ளீடு மற்றும் அமைப்பிலிருந்து தருபொருள் ஆகியவற்றிற்காக பயன்படுத்துவோருக்கு தேவைகளை வழங்குதல்;
- விபரங்களை பரிமாற்றம் செய்து கொள்ளுதல், தரத்திற்கான உறுதி அளித்தல் அல்லது தரம் பிரித்தல் மற்றும் பங்கு கொள்ளும் ஒப்பந்தங்களின் பகுதிகளில் வெளிப்படைத் தன்மையைக் குறிப்பிடுதல் போன்றவற்றிற்கான நடைமுறைகளை வரையறுக்க தேசீயம், மண்டலம் மற்றும் பன்னாட்டு முறைகளில் பங்கு கொள்ளுதல்;
- மீஉத அமைப்பிற்கு உரிய காலத்தில் விபரங்களை வழங்குதல்;
- தேசீய அளவிலிருந்து மண்டல மற்றும் உலக அளவிற்கு மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களை முறையாக தொகுப்பதை எளிதாக்குதல்; மற்றும்
- ஈடுசெய்யும் விபரம் மற்றும் தொலைதொடர்பு நுட்ப தொடக்க நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுதல் வளம்குன்றாத வளர்ச்சி தொடர்பான ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அறிவை ஏற்படுத்தி மேம்படுத்தி பரவச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

36. நாடுகள் நேரடியாக அல்லது மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளில் அவற்றின் பங்கு மூலமாக கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான பூர்வமான விபரங்களை மீஉத அமைப்பிற்கு வழங்க வேண்டும். தேசீய அல்லது மண்டல அளவில் நிறுவப்படும் மதிப்பீட்டு முறைகள் விபரங்களின் தரத்தின் தன்மையை உறுதிப்படுத்தும்.

37. உரியவாறு, மீஉத அமைப்பை மேலும் வலுப்படுத்தி செயல்படுத்த, பயிற்சிக்கான பொருட்களை மேம்படுத்த மற்றும் பயிற்சியை மேற்கொள்ள மாதிரி திட்டங்களில்

மற்றும் நிறுவனங்களில் பங்கு கொள்ள உவேஅ மற்றும் மீஊத அமைப்பின் பங்கு தாரர்களுக்கு நாடுகள் உதவ வேண்டும்.

38. மீஊத அமைப்பை மேம்படுத்துவதை உவேஅ தொடர்ந்திட வேண்டும். சமீபத்திய விபரங்கள் மற்றும் தொலைதொடர்பு நுட்பங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, உவே அமைப்பு, மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள் மற்றும் தேசீய நிறுவனங்கள் அமைப்பிற்கு உகந்ததை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இடையே பங்குதாரராகி மேம்படுத்த வேண்டும்.

**விபரத்தின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் முறைகள், மற்றும் திறனளவு ஆகியவற்றை மேம்படுத்துதல்**

39. சிறந்த விஞ்ஞான சாட்சியத்தின் நோக்கத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பன்னாட்டு முறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு, விபரத்தின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் முறைகள் மற்றும் திறனளவை மேம்படுத்துவதில் நாடுகள் பங்கு கொள்ள வேண்டும். தகவல்களைச் சரிபார்க்கும் நுட்பங்கள் மூலமாக மற்றும் பொருந்தக்கூடிய இரகசியத் தன்மைக்கு தேவையானவற்றுடன் இணக்கமான வழியில் இதனை மேம்படுத்த வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட திறனளவு மற்றும் முறைகளை நாடுகள் பயன்படுத்த வேண்டும்.

40. உவேஅ அதன் உறுப்பினர்களின் ஆதரவு மற்றும் பங்கு பெறுதலுடன், தரத்தை உறுதி செய்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் மீன்வள விபரங்களின் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக செய்முறைக்கான வழிகாட்டுதல்களை மேம்படுத்துவதை எளிதாக்க வேண்டும்.

**விபரங்களின் பகுதி மற்றும் அவற்றின் பரிமாற்றம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளை மேம்படுத்துதல்**

41. நாடுகள், நேரடியாகவோ அல்லது மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளில் பங்கு பெறுதல் மூலமாகவோ, உரியவாறு உவேஅமைப்புடன், மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களின் பகுதிகள் மற்றும் அவற்றை பரிமாற்றம் செய்து கொள்வதை எளிதாக்குவதற்கான ஒப்பந்தங்களை விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய ஏற்பாடுகள் பங்கு கொள்வோரின் பங்கு மற்றும் உரிமைகளைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறே விபரத்தின் தரம், வெளிப்படைத் தன்மை இரகசியத் தன்மை ஆகியவற்றைத் தெரிவிக்க வேண்டும்.

**மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கினை மதிப்பிடுவதில் செயல்குழுவின் பங்கு**

42. நாடுகள் அல்லது மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட வல்லுநர்களைக் கொண்ட செயல்குழுக்கள் மீன்வளம் மற்றும் மீன் இருப்பின் நிலை மற்றும் போக்கு பற்றி மதிப்பிட கூடுகிறது. அவற்றின் நடவடிக்கைகளைக் குறிப்பாகத் தெரிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் குறிப்புகளுக்கு ஏற்ப அவற்றின் பணிகளை மேற்கொள்கிறது. இது விஞ்ஞான பூர்வமான விபரங்களின் தரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் முக்கியமான நுட்பமாகும். திறனை மேம்படுத்துவதற்கான முக்கிய வாய்ப்புகளையும் அவை வழங்குகின்றன.

43. நாடுகள் நேரடியாகவே அல்லது மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளில் பங்கு கொள்வதன் மூலமாகவோ அவற்றிற்கு உரிய எல்லைக்குள் மற்றும் மண்டல திட்டங்களில், செயல் குழுக்களுக்கான ஏற்பாடுகளை அமைக்க

வேண்டும். அவற்றின் நிலை மற்றும் போக்கு பற்றிய மதிப்பீட்டிற்காக மீன்வள தகவல்கள் மற்றும் மீன் இருப்புகளை இவை ஆய்வு செய்யும். இத்தகைய செயல் குழுவின் கூட்டங்களின் சீரான இடைவெளி கிடைக்கக்கூடிய மனித வளம் மற்றும் நிதி ஆதாரங்களைப் பொறுத்து இருக்கும். மீன்வளத்தின் தன்மை மற்றும் கருத்தில் கொள்ள வேண்டிய மீன் இருப்பு ஆகியவற்றைப் பொறுத்து இருக்கும்.

44. நாடுகள் மற்றும் மேம்பாட்டில் பங்கு கொள்ளும் நிறுவனங்கள் உவே அமைப்பு இணைந்து பணியாற்ற வேண்டும். உலகம் முழுவதிலும் இருந்து மீன்வள வல்லுநர்கள் செயல்குழுவில் குறிப்பாக வளரும் நாடுகளில் திறனை மேம்படுத்துவதற்கு வழங்கப்படுவதில் பங்கு கொள்வதை உறுதி செய்ய வேண்டும். தொழில் நுட்ப ஒத்துழைப்பு திட்டங்கள் (தொஒதி) மற்றும் பிற உவே அமைப்பின் திட்டங்கள் இதற்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

**மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரம் தகவல் சேகரித்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துதல்**

45. நாடுகள் தகவல் சேகரித்தல், ஆய்வு செய்தல் மற்றும் அறிவித்தல் ஆகியவற்றிற்கான அவற்றின் அமைப்புகளை கண்காணிக்க வேண்டும். மீன்வள கொள்கை அமைத்தல் மற்றும் மேலாண்மை, ஏற்றுக் கொள்ளப்பட்ட மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள் மற்றும் உவே அமைப்பு ஆகியவற்றின் தேவைகளுக்குத் தொடர்ந்து அதரவாக இருக்க வேண்டும். உரியவாறு சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பகுதி 6: உயர்வு மற்றும் செயல்படுத்தும் நுட்பங்கள்**

**மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களை மேம்படுத்த பொதுவான அழைப்பு**

46. நாடுகள், மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மீன்வள விபரங்களை மேம்படுத்த நுட்பங்களை மேம்படுத்தி செயல்படுத்த வேண்டும். சிறந்த விஞ்ஞான சாட்சியம் கிடைக்கும் தன்மையை அதிகரிக்க ஆராய்ச்சியைப் பயன்படுத்த வேண்டும். உள்ளூர், மண்டலம் மற்றும் உலக அளவில் மீன்வள ஆதாரங்களின் வளம்குன்றாத பயன்பாடு, பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு உதவிட மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களைச் செழிப்பாக்குவதற்காக தொடரும் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**நாடுகளின் பங்கு**

47. நாடுகள் மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களை மேம்படுத்த எடுக்க வேண்டிய தேவையான நடவடிக்கைகளை மதிப்பீடு செய்ய வேண்டும். தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் தெரிவிக்க வேண்டும். விதித்தொகுப்பு மீதான இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உவே அமைப்பிற்கு தெரிவிக்க வேண்டிய அறிக்கையின் பகுதியாக, அவை ஏற்படுத்திய முன்னேற்றத்தைப் பற்றி தெரிவிக்க வேண்டும்.

**மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள்**

48. மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகள், அவற்றின் மரபுகளால் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களால் வழங்கப்பட்ட அதிகார எல்லை வரை, இந்த நடைமுறையைச் செயல் படுத்துவதில் பங்கு கொள்ள

வேண்டும். அவற்றின் உறுப்பினர்களுக்கு உதவி வழங்குதல், மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கு பற்றிய விபரங்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் வரையறைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பின்பற்றுதல் ஆகியவை மீதான தீர்மானங்கள் மற்றும் உலக அளவில் திட்டங்களில் பங்கு கொள்ளுதல் மூலமாக செயல்படுத்துதல் வேண்டும். மீஉத அமைப்பில் பங்கு பெறுபவராகவும் இருக்க வேண்டும்.

**உவே அமைப்பின் பங்கு**

49. உவே அமைப்பு அதன் கூட்டத்தின் கட்டளையிடப்பட்ட எல்லைவரை வழக்கமான மற்றும் களப்பணி திட்ட நடவடிக்கைகளின் பகுதியாக இந்த நடைமுறையை செயல்படுத்துவதில் நாடுகள் மற்றும் மண்டல மீன்வள அமைப்புகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு உதவிட வேண்டும்.

50. உவே அமைப்பு அதன் கூட்டத்தின் கட்டளையிடப்பட்ட எல்லைவரை, இந்த நடைமுறையைச் செயல்படுத்த உறுப்பினர் நாடுகளுக்கு உதவிட வேண்டும். வழக்கமான திட்டங்களுக்கான நிதியைப் பயன்படுத்தியும் மற்றும் இந்த நோக்கத்திற்காக நிறுவனத்தில் கிடைக்ககூடிய வரவு செலவு திட்டத்தின் உபரி நிதியைப் பயன்படுத்தியும் நாட்டில் தொழில்நுட்ப உதவி திட்டங்கள் மூலமாக உதவ வேண்டும். சிறந்த பாதுகாப்பு மற்றும் மீன்வள ஆதாரங்களின் மேலாண்மைக்காக உவேஅ குறிப்பிடக்கூடிய திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும். குறிப்பாக அவற்றுள் மிகச் சிறிய அளவில் மேம்பாடு அடைந்தவற்றையும் சேர்த்து வளரும் நாடுகளில் தகவல் சேகரிப்பு தொகுத்தல் மற்றும்ஆய்வு செய்தல் ஆகியவற்றிற்காக திறமையான மற்றும் தொடர்ந்து நீடிக்கும் அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

51. இந்த நடைமுறையை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை மீவகு மூலமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தெரிவிக்கும்.

**மேம்பாட்டில் பங்கு கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பங்கு**

52. மேம்பாட்டில் பங்கு கொள்ளும் தேசீய மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதி வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும். குறிப்பாக அவற்றுள் மிகச் சிறிய அளவில் மேம்பாடு அடைந்தவை மற்றும் சிறிய தீவுகளைக் கொண்ட வளரும் நாடுகள் மற்றும் தகவல் சேகரிப்பு அமைப்புகள் ஆபத்தான நிலையில் உள்ள நாடுகள் ஆகியவற்றிற்கு, இந்த நடைமுறையைச் செயல்படுத்துவதற்கு இன்றியமையாத திறனை மேம்படுத்துதல் மற்றும் தகவல் அமைப்பிற்காக முன்னுரிமை வழங்க வேண்டும்.

53. மீன்வளத்துடன், மீன்பிடிப்போருடன், நீர்வாழ் சுற்றுப்புறம் மற்றும் தொடர்பான ஆராய்ச்சி ஆகியவற்றுடன் தொடர்பு உடைய அரசு சாரா நிறுவனங்கள் (தேசீய, மண்டல மற்றும் பன்னாட்டு) இந்த நடைமுறையை செயல்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும். உரிய உதவி, விபரம், முறைகள் மற்றும் திறனை மேம்படுத்துதல் மற்றும் பங்கு கொள்தல் மூலமாக ஊக்கப்படுத்த வேண்டும்.

மீன்வளத்தில் மீன்பிடிபாட்டின் நிலை மற்றும் போக்கின் விபரங்களை மேம்படுத்தும் நடைமுறை ஒரு தன்னார்வமான சாதனமாகும். அனைத்து நாடுகளுக்கும் மற்றும் தொடர்புடைய பொருட்களுக்கும் பொருந்தும் இதன் முழுமையான நோக்கம் சூழல் அமைப்பிற்குள், மீன்வள ஆதாரங்களின் வளம்குன்றாத பயன்பாடு மற்றும் பாதுகாப்பிற்காக மீன்வள கொள்கை அமைத்தல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கு அடிப்படையாக மீன்வளத்தின் நிலை மற்றும் போக்கினைப் புரிந்து கொள்வதற்கும் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கும் திட்டம் மற்றும் நடைமுறை மற்றும் வடிவமைப்பை வழங்குவதேயாகும். தேவையான நடவடிக்கைகள் ஒன்பது முக்கிய பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றன. வளரும் நாடுகளில் திறனை வளர்த்தலுக்கான தேவை முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது.

ISBN 92-5-004979-X

9 789250 049793

TC/M/Y4859Tri/1/9.03/3000

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*